(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 105.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 ஜனவரி 23, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

391/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கண்டி தேசிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் மேற்படி மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகளில் அரைவாசிக்கு மேல் மருத்துவமனை இழந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அனுமதியின்றி குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் தொடர்பாக இன்றளவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனுமதியற்ற குடியிருப்பாளர்களை பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு இன்றளவில் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(vi) ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

3549/2023

கௌரவ லலித் வர்ண குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) களுத்துறை, ஹொரணை மற்றும் மத்துகம ஆகிய ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இன்றளவில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் நியமிக்கப்பட்ட தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுமார் 620 மாணவர்கள் கல்வி கற்கும் களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள களு/அல்-ஹசனியா மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியர் வெற்றிடம் உள்ளிட்டதாக இன்றளவில் 15 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலையில் போதுமானளவு கட்டட வசதிகள் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) கொடைவள்ளல்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி 12 வகுப்பறைகளுக்கும் மேசை மற்றும் கதிரை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

3596/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சனாதிபதி செயலகத்தில் இயங்கி வருகின்ற விசேட கருத்திட்ட அலகினூடாக 2022.07.14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலகில் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பதவி, சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலகில் பணியாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அரசியல் கட்சியொன்றில் முழுநேர ஈடுபாடுடையவர்கள் என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) மேற்குறித்த அலகினைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

3672/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் கடமையாற்றிய அமய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாளர்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நீக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டிருக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர் ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) இவர்கள் நீக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்டிருக்கும் அந்தப் பணியாளர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாது என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர்கள் சம்பந்தமாக இன்றளவில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

3707/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2023 ஒக்தோபர் 01 ஆம் திகதியளவில் —

(i) இலங்கையின் அரச பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள், தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை அதிபர்களின் எண்ணிக்கை;

(ii) கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், அழகியற்கலை, விளையாட்டு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

(iii) அதிபர் பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

(iv) பதில் அதிபர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கல்வி வலயங்களின் பிரகாரம்;

வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிகளவான ஆசிரியர் பற்றாக்குறையும் மிகையும் காணப்படுகின்றதும் அதிகளவான அதிபர் பற்றாக்குறையும் மிகையும் காணப்படுகின்றதுமான இருபது கல்விக் கோட்டங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

3713/2023

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 யூலை 01 முதல் 2020 டிசம்பர் 31 வரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட மற்றும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகளின் பெயர்களை வெவ்வேறாகவும்;

(ii) மேற்குறிப்பிட்ட இடமாற்றங்கள், நீதிபதிகள் வழமையாக இடமாற்றம் செய்யப்படுகையில் பின்பற்றப்படும் சாதாரண நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iii) இன்றேல், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

3718/2023

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேர் பெறுமதி வரி (VAT) வீதம் அதிகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை அறவிடப்பட்டுள்ள மொத்த சேர் பெறுமதி வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த வருடத்தின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது அவ்வதிகரிப்பு எவ்வளவு என்பதையும்;

(iii) அவ்வதிகரிப்பினுள் பணவீக்கம் காரணமாக அதிகரித்துள்ள சதவீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய வருமான வரி விகிதங்களை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் புதிதாக திறக்கப்பட்டுள்ள வரிக் கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் மூடப்பட்டுள்ள வரிக் கோப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வரிக் கோப்புகள் திறக்கப்பட்ட ஆட்களில், 2023 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உழைக்கும் போது செலுத்தும் வரியின் மூலம் இன்றளவில் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

3754/2023

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி, வெலிகெபொல பிரதேச செயலகப் பிரிவின் கலாசார நிலையம் நீண்டகாலமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) அதனை சீரமைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையத்தை சீரமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

3774/2023

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் பொருட்டு முன்னர் காணப்பட்ட விஷேட செயலாற்றுகையை அதாவது பதவியுயர்வுக்கான பரீட்சை முறையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக 22/0086/315/003 ஆம் இலக்க மற்றும் 2021.01.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கமைவாக பதவியுயர்வுக்கான பரீட்சை முறையை மீண்டும் அமுல்படுத்தும் திகதி யாதென்பதையும்;

(iii) அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் காணப்படுகின்ற சம்பள முரண்பாட்டை நீக்கி, மேற்படி சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு MN 3 சம்பள அளவுத் திட்டத்தை வழங்குவது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) மேற்படி சேவையில் தற்போது பணியாற்றுகின்ற பட்டதாரி உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) (i) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவை, இலங்கைப் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டு பணியாற்றுகின்ற சிவில் பணியாட்டொகுதியினருக்கும் வழங்குவதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

3822/2023

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மக்களுக்கு வசிப்பதற்காக இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் காணியினதும் பெயர், காணியின் அளவு, காணித்துண்டுகளின் எண்ணிக்கை, காணித்துண்டுகளை பகிர்ந்தளித்த திகதி, காணி அமைந்துள்ள கிராமம், கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும் ;

(ii) மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அக்காணிகளுக்கு உறுதிகளை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்காக பணம் அறவிடப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எவ்வடிப்படையில் பணம் அறவிடப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— சமூகப் பாதுகாப்பு உதவுதொகை (திருத்தம்),— 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பா. 82/2024

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,— இலங்கையில் சட்டக் கல்வியின் மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழு,— 1900 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயற்றப்பட்ட 1900 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டக் கல்விப் பேரவையின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை சட்டக் கல்லூரி தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதுடன் மூன்று பதவிவழி உறுப்பினர்களையும் நீதி அமைச்சரால் நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஏழு உறுப்பினர்களைப் பேரவை கொண்டிருக்கின்ற போதிலும்;

பிரதம நீதியரசர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டத்துறை தலைமையதிபதி ஆகிய மூன்றுபேர்களும் பதவி வழி உறுப்பினர்களாகச் செயற்படுவதோடு, பதவி வழித் தவிசாளராக பிரதம நீதியரசர் செயலாற்றுகின்ற அதேவேளை, சட்டக் கல்லூரியின் அதிபர் காலத்திற்குக் காலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றார்;

அத்துடன் கடந்த இரண்டு தொடக்கம் மூன்று தசாப்த காலப்பகுதியில் கல்லூரியில் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்திருக்கின்ற போதிலும், கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்படவுமில்லை, தேவைப்படும் வசதிகள் வழங்கப்படவுமில்லை என்பதுடன் மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளினூடாகச் சட்டக் கல்லூரியில் கற்பதற்கான அனுமதியினைப் பெறமுடியும்;

(அ) போட்டிப் பரீட்சைகளின் ஊடாக நேரடியான மாணவர் அனுமதிகள்;

(ஆ) உள்ளூர் சட்ட இளமாணிப் பட்டத்தைப் (எல்எல்பி) பின்வரும் பல்கலைக்கழகங்களில் பூர்த்திசெய்த மாணவர்கள்;

(i) கொழும்பு பல்கலைக்கழகம்

(ii) பேராதனைப் பல்கலைக்கழகம்

(iii) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

(v) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

(இ) சட்டக் கல்விப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் எல்எல்பி பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கும் மாணவர்கள்;

அத்துடன் தற்போது ஏறத்தாழ 7,500 மாணவர்கள் இருக்கின்றபோதிலும், உட்கட்டமைப்பு வசதி பெரும்பாலும் சில தசாப்தங்களுக்கு முன்பு இருந்ததைப் போன்று அதே நிலைமையில் இருப்பதுடன் கல்லூரியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 7,500 ஆக இருக்கின்ற போதிலும் கல்லூரியில் ஒரு நிரந்தர ஆசிரியர் மாத்திரமே காணப்படுவதாலும்;

அத்துடன் சட்டக் கல்வி மற்றும் சட்டக் கல்லூரியின் ஒட்டுமொத்த அலுவல்களின் சீர்திருத்தம் மற்றும் மீள்நோக்கு ஆகியன நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது எஞ்சியிருப்பதாலும்;

அத்துடன் சட்டக் கல்லூரியிலிருந்து பெறும் தொழில்முறைத் தகமைகளுடன் சேர்த்து சட்டத் தொழிலில் நுழைகின்ற தொழில்முறையானவர்களில் இரண்டு வகையினர் காணப்படுவதாலும்;

(அ) சட்டக் கல்லூரியின் மூன்று பரீட்சைகளிலும் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

(ஆ) உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து எல்எல்பி பட்டத்தைப் பெற்றுள்ள சட்டத்தரணிகள் மற்றும் கல்விசார்ந்தும் தொழில்முறை சார்ந்தும் தகைமை பெற்றிருக்கும் சட்டக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

அத்துடன் பல நாடுகளில் கடந்த சில தசாப்த காலங்களில் சட்டக் கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டிருப்பதுடன், சட்டக் கல்விக்கு பல புதிய பாடங்களும் துறைகளும் சேர்க்கப்பட்டிருப்பதாலும்;

சட்டக் கல்வியை விரிவுபடுத்துவதற்கான காலத்தின் தேவை ஒன்று காணப்படுவதுடன் நடைமுறையிலுள்ள தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு புதிய சட்டக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற காரணத்தினாலும் இலங்கையில் சட்டக் கல்வி பற்றிய மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கற்கைகள் தொடர்பான அரச கொள்கை மற்றும் சட்டத் தொழில் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் நியமங்களை வகுத்தல்;

(ஆ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கல்வியை ஒழுங்குபடுத்து வதற்கான ஆளுகைச் சபை ஒன்றைத் தாபிப்பதற்கான கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(இ) சட்டக் கல்வி பற்றிய ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் உறுப்பினர்களுக்கான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஈ) பின்வருபவை தொடர்பாகப் பிரயோகிக்கப்படவிருக்கும் செயன்முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல் —

(i) சட்டக் கல்லூரிக்கான அனுமதி மற்றும் அடிப்படைத் தகைமைகள்; அத்துடன்

(ii) சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் நோக்கத்திற்காக சட்டமாணிப் பட்டத்தை அங்கீகரிப்பது தொடர்பாகப் பிரயோகிக்கப் படவிருக்கும் நியமம் ஒன்று.

(உ) நவீன உலகில் பல்வகைப்பட்ட தொழில்முறைத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு கல்வித்தொகுதிகள் தொடர்பான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஊ) சுயாதீனமாகவும் தன்னிறைவாகவும் செயற்படுவதற்கான மாதிரி ஒன்றை அறிமுகப்படுத்துதல்; மற்றும்

(எ) தொழில்முறைச் சட்டக் கற்கைகள் மற்றும் நடைமுறை பற்றிய விருத்தி மற்றும் தரம் ஆகியவற்றிற்கான வேறு ஏதேனும் இடைநேர்விளைவான விடயம்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்திற்கும் (15) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3.

இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

4.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

5.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

8.

தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

9.

சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 01 ஆம் திகதிய 2334/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 நவம்பர் 01 ஆம் திகதிய 2356/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 20 ஆம் திகதிய 2363/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

காலவிதிப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 30 ஆம் திகதிய 2238/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 14 ஆம் திகதிய 2362/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*32.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*33.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

கடற்றொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*36.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில்துறை கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*37.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

38.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.